10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
## Ethiroli

குரல் 01 அதிர்வு 257 திங்கட்கிழமை பெப்ரவரி 05 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48



## பரணில் ஏறிப் போராட்டம்!

முல்லைத்தீவு, பெப்.05,

இராணுவப் பிடியில் இருக்கும் காணியை விடுவிக்கக் கோரி கேப்பாபிலவை சேர்ந்த ஆறுமுகம் வேலாயுதம்பிள்ளை என்பவர் பரண் மீதேறிப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் 06▶

### பிணைமுறி மோசடி விவகாரம்

# அலோசியஸ், பலிசேன கைது





கொழும்பு, பெப்ரவரி 05

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய அர்ஜூன் அலோசியஸ், கசுன் பலிசேன ஆகியோர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர். கொழும்பின் கொள்ளுப்பிட்டியிலுள்ள அலோசியஸின் வீடும், வெள்ளவத்தையில் உள்ள கசுன் பலிசேனவின் வீடும் சுற்றி வளைக்கப்பட்டே இந்தக் கைதுகள் இடம்பெற்றன.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியுடன் அர்ஜூன் அலோசியஸ் நடத்தி வந்த 06▶

### 70 ஆவது சுதந்திர தினம்

## தெற்கில் மகிழ்ச்சிக் கொண்டாட்டம்

## வடக்கு, கிழக்கில் சோபை இழந்தது

யாழ்ப்பாணம், பெப். 05

நாட்டின் 70 ஆவது சுதந்திர தினமான நேற்று தெற்கில் மகிழ்ச்சிக் கொண்டாட்டம் களைகட்டியது. ஆனால் வடக்கு, கிழக்கு சோபை இழந்து காணப்பட்டன. அத்துடன் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் நடந்தன.

சுதந்திர தினத்தின் பிரதான நிகழ்வுகள் கொழும்பில் இடம்பெற்றன. கொழும்பிலும் தெற்கின் ஏனைய 06▶



நாட்டின் 70ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் நேற்று காலி முகத்திடலில் நடைபெற்றபோது, இராணுவ மரியாதையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்பதைப் படத்தில் காணலாம்.



இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டனில் நேற்று நடந்த ஆர்ப்பாட்டம்

## கேப்பாபிலவில் பதற்றம்!

### மக்கள்–பொலிஸார் முறுகலால் ஏற்பட்டது

முல்லைத்தீவு, பெப். 05

சுதந்திர தினமான நேற்றுப் போராட்டம் நடத்திய கேப்பாபிலவு மக்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியதால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

கேப்பாபிலவு மக்களின் காணியை ஆக்கிரமித்து இராணுவம் பெரும் முகாம்களை அமைத்துள்ளது. 06▶

## மகிந்தவின் நெருங்கிய உறவினர் டுபாயில் கைது



கொழும்பு, பெப். 05

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவரும் மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய உறவினருமான உதயங்க வீரதுங்க கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவுக்கு செல்லும் வழியில் அவர் பயணம் செய்த விமானம் டுபாயில் தரையிறங்கியபோதே அவர் கைதானார் எனக் கூறப்படுகின்றது. 06▶

## சுதந்திர தினத்துக்கு வவுனியாவில் எதிர்ப்பு

வவுனியா, பெப். 05

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியாவிலும் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.

346 ஆவது நாளாக வவுனியாவில் போராட்டத்தைத் தொடரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளே இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

“70 ஆவது சுதந்திர தினத்தைக் 06▶





உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

# "தமிழீழத்தை வழங்கவே புதிய அரசியலமைப்பு!"

*கே: 2015 ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் தோல்வியடைந்தமைக்கு காரணம் என்ன?*

ப: தேவைக்கு அதிகமாக தனி நபர்கள் சிலரை நம்பியதுதான் முதல் காரணம். அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரை நம்பியதைக் குறிப்பிடலாம். அடுத்தது சர்வதேச சக்திகள். அவர்கள் என்னைத் தோற்கடித்ததை வெளிப்படையாகவே ஏற்றுக்கொண்டனர். இந்த சர்வதேச சதிகாரர்கள் எனக்கு எதிராகப் போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததோடு இனவாதத்தையும் தூண்டினர். இவ்வாறான செயற்பாடுகளால் மக்கள் ஏமாற்றப்பட்டார்கள். இதன் விளைவாக நான் தோற்கடிக்கப்பட்டேன்.

*கே: இந்தத் தேர்தலில் மொட்டுச் சின்னம் வெற்றிபெற்றால் உங்களால் மக்களுக்கு சேவை செய்ய முடியுமா?*

ப: இந்தத் தேர்தலானது இந்த அரசின் மூன்று வருட செயற்பாடுக்ள் சரியானவை? இல்லையா? என்று மக்கள் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. அரசு இரண்டு வருடங்களாக தேர்தலை நடத்தாது எல்லா சபைகளையும் அதன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. அந்தக் காலப்பகுதியில் எந்தவொரு சேவையையும் செய்யவில்லை. இதனால் குப்பைகள் அதிகரித்து டெங்கு நோய்கள் பரவின. பலர் இந்த நோயால் மரணித்தனர். தொற்றா நோய் பரவி அதன் ஊடாகவும் மக்கள் மரணித்தனர். நாம் சபைகளை கட்டுப்படுத்தினால் மாத்திரம்தான் இந்தக் சேவைகளை சரியான முறையில் செய்ய முடியும்.

*கே: நீங்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்துகின்றீர்கள் என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்கிறீர்களா?*

ப: கட்சியைச் சிதைப்பது நான் அல்ல. அத்தனகல தொகுதியிலும் பெலியத்தவிலும் மாத்திரம் சுதந்திர கட்சி வெற்றி பெற்ற வரலாற்றை நாம் மறக்கக்கூடாது. அப்படிப்பட்ட கட்சியை நானே பலப்படுத்தினேன். சந்திரிகாவின் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 ஆகக் குறைந்திருந்தபோது நாடாளுமன்றுக்கு 127 உறுப்பினர்களை கொண்டு வந்தேன். 90வீதமான உள்ளூராட்சி சபைகளையும் மாகாண சபைகளையும் கைப்பற்றினேன்.

2015 நாடாளுமன்றத் தேர்தலை நான் வழி நடத்தியபோது எமது செயலாளர்கள் இருவரையும் மைத்திரி நீக்கினார். மத்திய குழுவில் இருந்த அனைவரையும் நீக்கினார். எனக்குப் பிரதமர் பதவி வழங்கப்படமாட்டாது என்றார். எம்மை இதன் மூலம் பலவீனப்படுத்தி ஐக்கிய தேசிய கட்சியை வெற்றிபெறச் செய்தார். சுதந்திரக் கட்சியைப் பலவீனப்படுத்தியவர் யாரென்று இப்போது தெரிகிறதல்லவா.

*கே: உங்கள் புதிய கட்சியின் தலைவர் யார்?*

ப: தலைவர் யார் என்பது இங்கு முக்கியமல்ல. இந்த அரசுக்கு எதிரான பலமான எதிர்க்கட்சி ஒன்று தேவைப்படுகின்றது. மொட்டுச் சின்ன கட்சியால் மாத்திரம்தான் அந்த வெற்றிடத்தை நிரப்ப முடியும். பண்டாரநாயக்கவின் கொள்கை அழிந்துவிட்டது. இவர்கள் அழித்துவிட்டார்கள்.

பண்டாரநாயக்க அரச சொத்துக்களை விற்கவில்லை. அவர் சொத்துக்களைச் சேர்த்தார். அவரது கொள்கையை அடிப்டையாகக்கொண்டே நாம் எமது கட்சியை உருவாக்கியுள்ளோம். நான் அரசியலில் இருந்து ஒதுங்குவதற்கே இருந்தேன். மக்கள் என்னை விடவில்லை.

*கே: நீங்கள் நாமலை ஜனாதிபதியாக்குவதற்காகவா இப்போது அரசியலில் ஈடுபடுகிறீர்கள்?*

ப: இல்லை. அரசியலில் யாரும் யாரையும் ஜனாதிபதியாக்க முடியாது. மக்களின் நம்பிக்கை இருக்கும் வரை எவரும் அரசியலில் தொடர்ந்து இருக்க முடியும். மக்கள் எம்மீது இப்போதும் நம்பிக்கை வைத்துள்ளதை நாம் உணருகிறோம். அதனால்தான் நாம் தொடர்ந்து இருக்கின்றோம். நாமல்கூட மக்களின் நம்பிக்கையை வெல்லாவிட்டால் அவரும் அரசியலில் இருந்து நீங்க வேண்டி வரும். அரசியலில் இருக்கும்போது நாம் மக்களுடன்தான் இருக்க வேண்டும். பலம் இருக்கும்வரை அரசியல் செய்வோம்.

*கே: ஊழல், மோசடி காரணமாகவே உங்கள் அரசு கவிழ்க்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. ஆனால், இந்த அரசும் அதே சிக்கலில் சிக்கியுள்ளது. இரண்டு தரப்புகளின் குற்றச்சாட்டுக்களும் விசாரிக்கப்பட வேண்டும் அல்லவா?*

ப: நிச்சயமாக, எனக்கு எதிரான முதலாவது குற்றச்சாட்டுத்தான் தேர்தல் காலத்தில் சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பான எனது தேர்தல் விளம்பரத்துக்கு நான் கட்டணம் செலுத்தவில்லை என்பது.

பொதுவாக எந்தவொரு தொலைக்காட்சியுடனும் நான் நேரடியாகத் தொடர்பை ஏற்படுத்துவதில்லை. விளம்பர முகவர் நிறுவனத்தை அழைத்து அந்த நிறுவனத்திடம்தான் இந்தப் பொறுப்பை எமது கட்சி ஒப்படைக்கும். நான் அல்ல. அதுதான் இங்கும் நடந்துள்ளது. நான் எந்தவகையிலும் தொடர்புபடவில்லை.

ஆனால், ஊழலை ஒழிக்கப்போவதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் ஊழலில் ஈடுபட்டு வருகின்றனர். எனது ஆட்சியில் ஏதாவது மோசடி இடம்பெற்றதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டால் அதற்கு முகம்கொடுக்க நான் தயார். நாம் வெளிநாட்டு பிரஜைகளை நியமித்து, ஊழல் புரியவில்லை. இலங்கை நாட்டு அதிகாரிகளை நியமித்தே பொருளாதாரத்தை முன்னேற்றினோம்.

*கே: மகிந்த கடன்களைப் பெற்று நாட்டை பலவீனப்படுத்திவிட்டார் என்று சொல்லப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில்.....?*

ப: கடன்கள் மூலம் ஒருபோதும் நான் நாட்டை சிக்கவைக்கவில்லை. நான் எடுத்த கடனைவிடவும் அதிமான தொகையை இந்த அரசு வெறும் மூன்று வருடங்களில் பெற்றுள்ளது.

*கே: நீங்கள் பெற்ற கடனை மீளச் செலுத்துவதற்காகவே கடன் பெற்றோம் என்று இந்த அரசு கூறுகின்றதே?*

ப: அப்படியென்றால் கடன் இல்லாமல் போயிருக்க வேண்டுமே. நாம் பெற்ற கடனைச் செலுத்தும் ஆற்றல் எம்மிடம் இருந்தது. அதன்படி, கடனை மீளச் செலுத்தியும் வந்தோம். இவர்களால் இதைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமை நான் செய்த தவறு இல்லை.

அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற இடங்களை விற்காமல் அவற்றை அபிவிருத்தி செய்யும் திட்டமும் அதற்காகப் பெறப்பட்ட கடனைச் செலுத்தும் திட்டமும் எம்மிடம் இருந்தன. அதைப் பின்பற்றுமாறு கூறினேன்.

கொழும்புத் துறைமுக நகரம் மூலம் ஆறாயிரம் ஏக்கர் நிலத்தை நாம் நாட்டுக்காக புதிதாகப் பெற்றுக்கொண்டோம். அதில் 25 ஹெக்டேயர் நிலத்தை மாத்திரம் சீனாவுக்கு கொடுத்தேன்.

*கே: சங் கிரிலா ஹோட்டல் நிர்மாணிப்பதற்கு அவர்களுக்கு நிலத்தை விற்றது ஏன்?*

ப: யுத்தம் முடிந்ததும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்ந்து இழுப்பதற்காக உலகில் நூற்றுக்கணக்கான ஹோட்டல்களை வைத்திருக்கும் சங் கிரில்லா நிறுவனத்துக்கு இராணுவ தலைமையகத்துக்குச் சொந்தமான 6 ஏக்கர் நிலத்தை விற்றேன். அந்தப் பணத்தை இராணுவத் தலைமையகத்துக்கே கொடுத்தேன்.

சங் கிரில்லாவுக்கு கொடுத்ததன் காரணமாகவே அதனைத் தொடர்ந்து பல நிறுவனங்கள் இலங்கையை நோக்கிப் படையெடுத்தன.

*கே: முஸ்லிம்களுக்கு எதிராக பொது பல சேனாவை உருவாக்கி இனவாதத்தை தூண்டினீர்கள் என்ற குற்றச்சாட்டு உண்டு. இதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?*

ப: இது பொய். இது சர்வதேசச் சதி. முஸ்லிகள் அனைவரும் எம்முடனேயே இருந்தனர். வியாபாரிகள் அனுகூலங்களைப் பெற்றனர். மூதூரில் விரட்டப்பட்ட முஸ்லிம்களை ஒரு மாதத்துக்குள் மீள் குடியேற்றினேன்.

அளுத்கம சம்பவம் இடம்பெற்றபோது நானும் கோத்தபாயவும் நாட்டில் இருக்கவில்லை. இந்தச் சம்பவத்துக்குப்

**(ஐந்தாம் பக்கம் பார்க்க)**



எதிரொலி
Ethiroli
திங்கள். 05 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

## திட்டம் கடைசிக் கட்டத்தில்...

ஊழலுக்கு எதிரான தன் வாளை சுதந்திரதின உரையிலும் சுழற்றியிருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால. அவர் காலிமுகத் திடலில், ஊழலற்ற தேசத்தை உருவாக்க அனைவரும் நிதிக் கையாளுகை ஒழுங்கை நேர்மையுடன் அனுசரிக்க வேண்டும் என்று உபதேசம் செய்தபோது, 'வழக்கம் போல வாய்ச்சொல் வீரவிளையாட்டே இது' என்று ஒதுக்க முடியாதபடி , அதிகாலையில் ஒரு சம்பவம் நடந்திருந்தது. மத்திய வங்கிப் பிணைமுறி மோசடியின் முக்கிய சூத்திரதாரி என்று ஜனாதிபதி ஆணைக்குழுவால் குற்றம் சாட்டப்பட்ட, பேச்பர்ச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன அலோசியஸும், அந்த நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான கசுன் பலிசேனவும் மின்னாமல், முழங்காமல் இலங்கையின் சுதந்திரதினப் பரிசாக விடிகாலையிலேயே கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

இந்த அதிரடிக் கைது நடவடிக்கை, பிணைமுறி மோசடியோடு சம்பந்தப்பட்ட ஏனையோரை மட்டுமல்லாது, மகிந்த தரப்பினரையும் ஒரு கலக்கு கலக்கியுள்ளது. ஏனெனில் தற்போது பரவலாகப் பிணைமுறி மோசடி மட்டுமே பேசப்பட்டு வருவதால், அந்த மோசடி குறித்த அறிக்கையோடு சேர்த்துச் சமர்ப்பிக்கப்பட்ட பாரிய ஊழல்கள் தொடர்பான அறிக்கை பற்றி பலரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் உண்மையில், பிணைமுறி மோசடி அறிக்கையை விடவும், பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பிலான அறிக்கையே பலரின் ,அரசியல் வாழ்வுக்கே ஆப்பு' வைக்கக் கூடியளவுக்கு வீரியம் மிக்கது. பிணைமுறி மோசடியில் கைய்யாளப்பட்ட பணத்தின் அளவு பெரிதுதான். ஆனால் அந்த மோசடியோடு ஒரு சிலருக்கு மட்டுமே சம்பந்தமுண்டு. பிணைமுறி ஏல விவகாரத்தில் மோசடி செய்து ட்ரில்லியன் கணக்கில் பணத்தைச் சுருட்டினார்கள்" என்பது மட்டுமே குற்றச்சாட்டாக இருக்கிறது. ஆனால் பாரிய ஊழல்கள் மோசடி விசாரணைக் குழுவின் அறிக்கையிலோ, அதிகாரத் துஷ்பிரயோகம், அரச நிதிக் கையாடல், சட்ட மீறல்கள், லஞ்சம் கொடுத்தலும் வாங்கலும், வரி ஏய்ப்புச் செய்தமை, அரச சொத்துக்களைத் துஷ்பிரயோகித்தமை என்று ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்கள். அதிலும் ஓரிருவர் மீது இப்படி அடுக்கடுக்காக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் காரணமாக, அவர்கள் ஒரு குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டாலும் கூட, அடுத்த குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டு சிறைப்பறவையாக மாற வேண்டியதுதான்.

ஏற்கனவே இந்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முன்னிலையாகிய போதும், மகிந்த ராஜபக்சவையும், கோத்தபாயவையும் தவிர மற்றைய எல்லோரும் ஒருமுறையாவது கைதாகி விடுவிக்கப்பட்டவர்களே. இன்னமும் அவர்கள் பிணையில் தான் வெளியில் நடமாடுகின்றார்களே தவிர, குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்படவில்லை. அத்தோடு பிணையில் அவர்கள் விடுவிக்கப்பட்ட நிலையிலும் அதன் பின்னர் பலமுறை விசாரணைக்காக அழைக்கப்பட்டுமிருந்தார்கள். ஆனால் அந்த விசாரணைகள் முடிந்தும் கூட, அறிக்கை சமர்ப்பிக்கப்படாமல், நடவடிக்கை எடுக்கப்படாமலேயே இருந்தது. அத்தோடு ரகர் வீரர் தாஜுதீனின் கொலை வழக்கும் ஆரம்பத்தில் அசுர வேகத்தில் நடைபெற்ற விசாரணைகள், 'இவர்கள் தான் கொலையாளிகள்' என்று மர்மமுடிச்சு அவிழத் தொடங்கிய கணத்தில், மந்த கதிக்கு மாறின.

இப்படி மகிந்த அணி மீதான நடவடிக்கைகளை மைத்திரிபால, தாமதப்படுத்தியமைக்கு சில காரணங்கள் உண்டு. எடுத்தோம், கவிழ்த்தோம் என முதலிலேயே மகிந்த பக்கத்தில் உள்ளவர்களை உள்ளே தள்ளினால், அது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி, அவர்கள் பக்கம் ஒரு அரசியல் அனுதாப அலையை உண்டுபண்ணியிருக்கும். ஆனால் இப்போது தங்கள் தரப்பில் இருப்பவர்கள் செய்த தவறைக் கண்டுபிடித்து, அதற்காக அவர்களைக் கைதும் செய்த பின்னர், யார் தவறு செய்தாலும் மைத்திரிபால, நடுநிலையான முடிவுகளை எடுப்பார் என்ற விம்பம் உருவாகிவிட்டது. இதனால் இனி மகிந்த அணி மீது துணிந்து கைவைக்கலாம். 'தன் அரசில் இருந்தவர்களையே தண்டித்த ஜனாதிபதி காரணமில்லாமல் மகிந்த அணியை உள்ளே தள்ளியிருக்க மாட்டார்' என்ற எண்ணமே மக்களிடம் மேலெழும். இதனால் எந்த அரசியல் அனுதாப ஆதாயத்தையும் மகிந்த தரப்பால் எட்டமுடியாமல் போய்விடும்.

இதுதான் மைத்திரியின் தாமதிக்கப்பட்ட நீதிக்கு காரணமாக இருக்க முடியும். எப்படியோ தான் நினைத்தபடி மகிந்த தரப்பை உள்ளே தள்ளுவதோடு, அதனால் எவ்வித பாதிப்பும் வராதபடி மிகக் கவனமாகப் போட்ட திட்டத்தின் கடைசிக் கட்டத்தை மைத்திரி அடைந்துவிட்டார். இனி கைதுகள் என்ற பல வேடிக்கைகளை நாளும் காணலாம்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# பிரபாகரன் இருந்திருந்தால் அரசியலுக்கு வந்திருக்கமாட்டேன்!

## அங்கஜன் உரை

யாழ்ப்பாணம், பெப்.05

"புலிகளின் தலைவர் பிரபாகரன் இன்று உயிரோடிருந்தால் நான் அரசியலுக்கு வர வேண்டிய தேவையே இருந்திருக்காது. அந்தளவுக்கு எங்கள் பகுதியைப் புலிகள் சிறப்பாக ஆட்சி செய்திருப்பார்கள்" என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"பொருளாதார ரீதியாக முன்னேறாத எந்த இனமும் உரிமையைப் பெற முடியாது. நாம் இவ்வளவு காலமும் செய்த தியாகத்துக்கு மதிப்புக் கிடைக்கவில்லை. நாம் இனியும் ஏமாறக் கூடாது. ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன இலஞ்சம், ஊழல் அற்ற சேவையை வழங்க முயற்சித்து வருகிறார்.

அத்துடன் கடந்த காலத்தில் வடக்குக்கு வந்த வீட்டுத்திட்டம் போதாது. ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் ஒருசில வீட்டுத்திட்டங்களே வழங்கப்பட்டுள்ளன. அது எமக்குப் போதாது.



பொருத்து வீட்டுத்திட்டம் எமக்கு பொருத்தமற்றது. அதில் ஐக்கிய தேசிய கட்சி ஊழல் செய்துள்ளது. எனவே தான் தற்போது 50 ஆயிரம் கல் வீட்டுத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி முயற்சித்து வருகிறார். இதில் யாழ். மாவட்டத்துக்கு 26 ஆயிரம் வீடுகள் வரை கிடைக்க கூடிய சந்தர்ப்பம் உள்ளது. இது தொடர்பாக நான் அடுத்து வரும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடுவேன். சிலர் கேட்கின்றனர் பிரபாகரன் இருந்திருந்தால் அங்கஜன் அரசியலுக்கு வந்திருப்பாரா? என்று. பிரபாகரன் இருந்திருந்தால் நான் அரசியலுக்கு வர வேண்டிய தேவை இல்லை. அவர்கள் தேசத்தை சிறந்த கட்டுக்கோப்புடன் கட்டி ஆண்டிருப்பார்கள். எனது தேவை சமூகத்துக்கு தேவைப்பட்டிராது.

எமது தமிழ் மக்கள் கடந்த காலத்தில் தவறானவர்களை தேர்தலில் தெரிவு செய்ததன் விளைவாக தற்போது எண்ணெய்ச் சட்டிக்குள் இருக்கின்றனர். இம்முறை தேர்தலிலும் அதே தவறினைச் செய்தால் தமிழ் மக்கள் எண்ணெய் சட்டியில் இருந்து நெருப்புக்குள் விழுவது உறுதியாகிவிடும். அரசாங்கத்திடம் இருந்து பணம் பெற்றவர்கள் உங்களுக்கு விசுவாசமாக இருப்பார்களா? அல்லது அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருப்பார்களா? என்பதை நாம் சிந்திக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# கொழும்பு துறைமுகநகரால் கட்டடங்களுக்குப் பாதிப்பு

கொழும்பு, பெப்.05

துறைமுக நகரத்திட்டத்தால் கொழும்பு நகரம் தாழிறங்காது. எனினும் கட்டடங்கள் சிலவற்றுக்குப் பாதிப்பு ஏற்படுமென அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தன்னுடைய உத்தியோகப்பூர்வ பேஸ்புக் தளத்திலேயே அமைச்சர் சம்பிக்க இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

"கடலை மூடி மண் நிரப்பப்படுவதால் கடலின் நீர்மட்டம் அதிகரிக்கும். இதனால் நிலத்தடியின் கீழ் இணைக்கப்படாத கட்டடங்கள் இவ்வாறு பாதிப்பை எதிர்நோக்கும். பழைய நாடாளுமன்றக் கட்டடம், ஜனாதிபதி செயலகம், தபால் கட்டடம் ஆகியன இவ்வாறான ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன.

துறைமுக நகரின் 238 ஹெக்டேயருக்கு வெளியே இருந்துக்கொண்டு வரப்பட்டு மண் நிரப்பப்பட்டுள்ளதால் கண்டிப்பாக நீர்மட்டம் அதிகரிக்கும். இதிலிருந்து கட்டடங்களைப் பாதுகாக்க கால்வாய்கள் அமைக்கப் பட்டுள்ளது.



கொழும்பில் கட்டடங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதால், சில பாதிப்புக்கள் தற்போதே ஏற்பட வேண்டும் எனினும் அவ்வாறான பாதிப்புக்கள் எதுவும் இதுவரை ஏற்படவில்லை. எதிர்காலத்தில் இப்படி நடக்காது என்றும் கூறமுடியாது. அதற்கும் நாம் தயாராகவிருக்க வேண்டும். துறைமுக நகரங்களின் கட்டடங்கள் நிலத்தடி கீழ் இணைக்கப்பட்டுள்ளதால் கட்டடங்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாது. இவ்வாறு ஏதாவது பாதிப்புக்கள் ஏற்படுவதை முன்கூட்டியே அறியும் நவீன உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன" அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரித்துள்ளார். (அ)

## வாக்களிப்பு தின இரவே முடிவுகள் வெளியாகும்

கொழும்பு, பெப்.05,

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலின் முடிவுகள், அன்று இரவு 7 மணிக்கும், 8 மணிக்கும் இடையில் வெளிவரத் தொடங்கும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொகமட் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு மாலை 4 மணியுடன் முடிவடையும். உடனடியாக, அந்தந்த வாக்களிப்பு நிலையங்களிலேயே, அந்தந்த வட்டாரத்துக்குரிய வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

தேர்தல் முடிந்து மூன்று, நான்கு மணி நேரங்களில் சிறிய சபைகளின் முடிவுகளை, அதிகாரபூர்வமாக அறிவிக்கக் கூடியதாக இருக்கும். எனினும், பெரிய மாநகரசபைகளின் முடிவுகளை வெளியிட அதிக நேரம் தேவைப்படும்.

தேர்தல் முடிவுகளை வெளியிடக் கூடிய சரியான நேரத்தை கூறுவது கடினம். ஆனால் நாங்கள் இரவு 7 மணிக்கும், 8 மணிக்கும் இடையில், ஆரம்ப முடிவுகளை வெளியிட முடியும் என்று எதிர்பார்க்கிறோம்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

# யாழ்ப்பாணத்திலும் சுதந்திர தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப்.05

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்திலும் கொண்டாடப்பட்டன.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் செயலக வளாகத்தில் நேற்றுக் காலை சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே பிரதம அதிதியாக கலந்துகொண்டு தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து போரில் உயிர்நீத்த இராணுவத்தினருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. முப்படைகளின் அணிவகுப்பும்,



சமய,கலாசாரங்களை அடையாளப்படுத்தும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் அரச அதிகாரிகள், பெருமளவிலான இராணுவத்தினர், மாணவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். (இ)


## இன்று நாளும் கோளும்

05.02.2018 திங்கட்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 23 ஆம் நாள்
பஞ்சமி பி.ப. 01.20 மணி வரை ஹஸ்தம் 03.10 வரை சித்தயோகம்
இராகுகாலம் 07.30 - 09.00 சுபநேரம் மு.ப. 06.30 - 07.30 எமகண்டம் மு.ப. 10.30 - 12.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப்ரீதி | நட்பு | போட்டி | ஆர்வம் | மேன்மை | பயம் | இன்பம் | நன்மை | நிறைவு | வெற்றி | பெருமை | கடன்தீரல் |

எதிரொலி Ethiroli
திங்கள் 05 பெப்ரவரி 2018

# ஊழலை எதிர்ப்பதே உண்மையான நாட்டுப்பற்று



கொழும்பு, பெப்.05

"26 வருடங்களுக்கும் மேலாக, இந்த நாட்டைப் பிரிக்க முயன்ற விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் போராட வேண்டியேற்பட்டதால், இலங்கை பொருளாதாரத்தில் நலிந்திருந்தது. அதனை மீட்டெடுக்கும் வகையில், ஊழல், திருட்டு, இலஞ்சத்துக்கு எதிராக நிதி தொடர்பில் அனைவரும் ஒழுக்கத்தைப் பேணவேண்டும். அதுவே உண்மையான நாட்டுப்பற்று ஆகும்" என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று இடம்பெற்ற வைபவத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையில் இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

"தற்போது நாட்டுப் பற்றாளர் தன்மை என்பது நிதி ஒழுக்கத்துடனான செயற்படுவதே ஆகும். இதற்காக அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளைப் போன்று அனைத்து மக்களும் முன்னோடியாகச் செயற்பட வேண்டும். நாட்டில் தூய்மையான அரசியலை கட்டியெழுப்புவதற்கு அனைவரதும் அர்ப்பணிப்பும் தேவை.

ஊழல் எதிர்ப்பு நாட்டுக்கு பெரும் பாதுகாப்பானதாகும். ஊழல் எதிர்ப்பு நிலைப்பாட்டை வலுப்படுத்துவது நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றமான பாதைக்கும் அடிப்படையாக அமையும். நாட்டின் பொருளாதார சுதந்திரத்திற்காக திருட்டு, வீண்விரயம், ஊழல், மற்றும் இலஞ்சம் ஆகியவற்றை இல்லாதொழிப்பது அத்தியாவசியமாகும்.

நாட்டில் சிறப்பான அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்புவது நாட்டின் தற்போதைய தேவையாகும். இருப்பினும் ஊழல் மிக்க அரசியல் ,இந்த தேசத்தின் முன்னேற்றத்துக்குத் தடையாக அமைந்துள்ளது. இதனால், மேல் மட்டத்தில் இருந்து கீழ் மட்டம் வரை திட்டமிட்ட வகையிலான ஒழுக்கத்துடனான புதிய அரசியல் சமூகமாக முன்னோக்கிப் பயணிக்க வேண்டிய தேவையுள்ளது. 26 வருடங்களுக்கும் மேலாக, இந்த நாட்டைப் பிரிக்க முயன்ற விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் போராட வேண்டியேற்பட்டதால், இலங்கை பொருளாதாரத்தில் நலிந்திருந்தது. அதனை மீட்டெடுக்கும் வகையில், ஊழல், திருட்டு, இலஞ்சத்துக்கு எதிராக நிதி தொடர்பில் அனைவரும் ஒழுக்கத்தைப் பேணவேண்டும். அதுவே உண்மையான நாட்டுப்பற்று ஆகும்

தேசத்தின் சவால்களை அடையாளங் கண்டு செயற்படுவதற்கு அரசாங்கம் முக்கியத்துவம் வழங்கியுள்ளது. இதில் வறுமையை இல்லாதொழிப்பதில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எதிர்கால வேலைத்திட்டம் மற்றும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அரச நிர்வாகத்தை செயற்திறன் மிக்கதாக மேம்படுத்த வேண்டும். இதற்காக காலங்கடந்த கட்டளைகள், விதிமுறைகளில் துரிதமாக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

'தேசிய சவாலை வெற்றி கொள்ளும் போது நேர்மை மிக முக்கியமானதாகும்.

உண்மையான சுதந்திரம் மனிதனின் சுதந்திரத்துக்கு மாத்திரமல்ல. மரம், செடி உள்ளிட்ட இயற்கை சொத்துக்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். அது தொடர்பில் உள்ள பொறுப்பு குறித்து பாடசாலை மாணவர்கள் முதல் அனைவருக்கும் மிகவும் தெளிவை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். சுதந்திரத்தின் சகல பிரிவுகளையும் வலுவூட்டி, நாட்டின் மக்களின் அடையாளத்தை உறுதி செய்ய வேண்டும்.

அனைத்து இன மக்களுக்கும் சுதந்திரமாக வாழும் உரிமையை உறுதி செய்து நல்லிணக்கத்தை வலுப்படுத்த வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## 'காலம்' சிற்றிதழ் அறிமுக அரங்கு!

யாழ்ப்பாணம், பெப்.05

கனடாவிலிருந்து வெளிவரும் 'காலம்' சிற்றிதழின் 51 ஆவது இதழ், குழந்தை ம.சண்முகலிங்கம் சிறப்பிதழாக வந்துள்ளது. அதன் அறிமுக அரங்கும் 'காலம்' ஆசிரியர் செல்வத்துடனான சந்திப்பும், இல. 121, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள சிந்தனைக்கூட கேட்போர்கூடத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை மூன்று மணிக்கு நடைபெறும்.

கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இவ்வரங்கில் - தமிழ் முதுநிலை விரிவுரையாளர் க. அருந்தாகரன், தி. செல்வமனோகரன், ஜோண்சன் ராஜ்குமார் ஆகியோர் உரையாற்றுவர். ஆர்வமுள்ளோர் அனைவரும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ)

## நெல் அல்லாத விவசாயம் உலக வங்கி ஊக்குவிப்பு



கொழும்பு, பெப்.05

இலங்கையில் நெல் அல்லாத விவசாய உற்பத்திகளை ஊக்குவிக்கும் திட்டமொன்றை விவசாய அமைச்சு முன்னெடுத்துள்ளதாக உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைப்பின் செயற்றிட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்துக்கு உலக வங்கி உதவி செய்வதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்தத் திட்டத்தில் கொய்யா, மிளகாய், பாகற்காய், பப்பாசி, வெங்காயம், நிலக்கடலை, அன்னாசி, திராட்சை போன்ற பயிர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அனுராதபுரம், பொலனறுவை, மட்டக்களப்பு, மொனராகலை, மாத்தளை ஆகிய 7 மாவட்டங்களில் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. (அ)

## பொலித்தீனுக்கு காட்டிலும் தடை



கொழும்பு, பெப்.05

வனவிலங்குப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றுக்குட்பட்ட வனப் பாதுகாப்பு பிரதேசங்களில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.

"இந்தத்தடை நேற்றுமுதல்நடைமுறைப் படுத்தப்படும். இந்த தடையை மீறுவோருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கமைவாக பயன்படுத்தப்பட்ட பின்னர் வீசப்படும் பிளாஸ்டிக் போத்தல்கள், பொலித்தீன் பொதிகள், பொலித்தீனுடன் பொதி செய்யப்பட்ட உணவு முதலானவை பாதுகாக்கப்பட்ட தேசிய பூங்கா, உலக மரபுரிமை, வனப் பாதுகாப்பு பகுதிகள் ஆகிய இடங்களுக்கு எடுத்துச் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது" என்று வனவிலங்குப் பாதுகாப்பு திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

## சொல்வதெல்லாம் பொய்

கிளிநொச்சி, பெப்.05

தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை என மறுப்பு வெளியிட்டுள்ளார் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர் கம்சநாதன்.

கடந்த இரண்டாம் திகதி கிளிநொச்சியில் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள், கரைச்சி பிரதேச சபையின் செயலாளருக்கெதிராக சில குற்றச்சாட்டுகளை முன்வைத்து கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர். இது தொடர்பில் கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் க.கம்சநாதனை வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"வரிப்பணம் சம்பந்தமாக நான் வருடப்பணத்தை முழுமையுமாகக் கட்டுவதற்கு கோரியிருந்ததாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறியிருந்தார்கள். ஆனால் அது பொய்யானது. நாம் அதற்கென உத்தியோகத்தர்களை நியமித்து மாதாந்தம் குறித்த தரிப்பிடங்களுக்கு சென்று அந்தப் பணத்தை பெறுவதற்கு ஏற்பாடு செய்திருந்தோம்.

எமது உத்தியோகத்தர்கள் தரிப்பிடங்களுக்கு செல்லும் போது அவர்கள் வரிப்பணத்தை செலுத்தாமலும், தங்களுக்கான அறிவித்தல் வழங்கப்படவில்லை எனவும், எனவே குறித்த அறிவித்தலை வழங்கினாலேயே வரிப்பணத்தை செலுத்துவோம் எனவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

ஆகவே நாங்கள் எமது ஊழியர்களை அனுப்பி அந்த வரிப்பணங்களை அறவிடுகின்றோம் நாம்எவரையும்அனுப்பவில்லை வருடப்பணத்தை முழுமையாக ஒரே தடவையில் அறவிடுகின்றோம் என்பது உண்மைக்குப் புறம்பானது. இவ்வாறு வரிப்பணம் செலுத்தாத 27 பேருக்கு கடந்த வருடமும் 47 பேருக்கு இவ் வருடமும் வழக்குத்தாக்கல் செய்துள்ளோம்.

தரிப்பிட வரி அறவீடு, தரிப்பிட மேற்பார்வை மற்றும் அனுமதி வழங்குதல், அனுமதி ரத்து செய்தல் என்பன தொடர்பான அதிகாரம் முச்சக்கரவண்டிச் சங்கத்துக்கு இல்லை . அந்த அதிகாரங்கள் கரைச்சி பிரதேச சபைக்கே உள்ளன" என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## தேரரின் சாவுக்கு யானை காரணியல்ல

கொழும்பு, பெப்.05

"பெல்லங்கவில ரஜமகாவிகாரையின் விகாராதிபதியும், ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைகழகத்தின் உப பீடாதிபதி பேராசிரியர் பெல்லங்வில விமலரத்ன தேரர், யானை தாக்கிய காரணத்தால் உயிரிழக்கவில்லை. அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதாலேயே உயிரிழந்தார்" என களுபோவிலை போதனா வைத்தியசாலையின் நீதிமன்ற வைத்திய அதிகாரி பீ.பீ. தசநாயக்க தெரிவித்துள்ளார்.

தேரரின் முதுகில் காயம் ஒன்று ஏற்பட்டிருந்தது. இதனால் அவருக்கு சத்திரசிகிச்சையொன்று மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து தேரருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளமைக் குறித்து பிரேத பரிசோதனையின் போதே தெளிவாகியுள்ளது என வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2ஆம் திகதி காலை விபத்தொன்றில் சிக்கிய தேரர் களுபோவில போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டதாகவும், அங்கு சத்திரிசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அவர் தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு மாற்றப்பட்டதாகவும், குறித்த தனியார் வைத்தியசாலையில் வைத்தே தேரர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சுதந்திர நாள் விருந்து ரத்து

கொழும்பு, பெப்.05

இலங்கையின் 70 ஆவது சுதந்திர நாள் வரவேற்பு விருந்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரத்துச் செய்துள்ளார்.

சுதந்திர நாளன்று பாரம்பரிய முறைப்படி, ஜனாதிபதியால் இராப்போசன வரவேற்பு விருந்து ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகிறது. இதில், உள்நாட்டு, வெளிநாட்டு பிரமுகர்கள், இராஜதந்திரிகள் பங்கேற்பது வழக்கம்.

இம்முறையும், இந்த விருந்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன. சுமார் 600 விருந்தினர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், அழைப்பிதழ் அனுப்பப்பட்ட வெளிநாட்டு தூதுவர்கள், மற்றும் இராஜதந்திரிகள், பிரமுகர்களுக்கு இந்த விருந்துபசார நிகழ்வு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் நிகழ்வு ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு இன்னமும் ஐந்து நாட்களே இருப்பதால், பரப்புரைகள் தீவிரமடைந்துள்ளன. இதனைக் கருத்திற் கொண்டே, சுதந்திர நாள் இராப்போசன வரவேற்பு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே அழைப்பிதழ் கிடைத்த பலர், தமக்கு நிகழ்வு ரத்துச் செய்யப்பட்டமை தொடர்பான அறிவித்தல் கிடைக்கவில்லை என்றும் கூறியுள்ளனர். (அ)

## ஓட்டோ-லொறி மோதல் நால்வர் பலி

கொழும்பு, பெப்.05

கல்னேவ- திஸ்பனேபுர பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற முச்சக்கர வண்டி விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

முச்சக்கர வண்டியொன்றும், சிறிய ரக லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நால்வருள் 7 வயதான சிறுவன் ஒருவனும் உள்ளடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# படையினர் குருதிக்கொடை





முல்லைத்தீவு, பெப்.05
இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தினை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தினரின் குருதிக்கொடை நிகழ்வு ஒன்று நேற்று நடைபெற்றது.

முல்லைத்தீவு படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் பிராந்திய இரத்த மத்திய நிலையத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது. (அ)

# "தமிழீழத்தை வழங்கவே புதிய அரசியலமைப்பு!"

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னால் இருந்த அனைவரும் இப்போது இந்த அரசுடன்தான் இருக்கின்றனர். என்னுடன் இருந்த முஸ்லிம்கள் அனைவரையும் எனக்கு எதிராகத் திருப்புவதற்கு இவர்கள் செய்த சதிதான் அளுத்கம கலவரம்.

என்னுடன் இருந்துகொண்டே இவர்கள் எனக்கு எதிராகச்சதி செய்தனர். எனது தோல்விக்கு காரணம் தனிநபர்கள் சிலரை தேவைக்கு அதிகமாக நம்பியதுதான் என்று நான் ஏற்கனவே கூறியமைக்கு இதுதான் காரணம். எதிர்காலத்தில் உருவாகும் எனது அரசில் இவர்களை இணைத்துக்கொள்ளமாட்டேன். எனது சலூன் கடையின் கதவுகள் ஒரு பக்கம் மாத்திரமே திறந்துள்ளது. தெரிவு செய்தே உள்ளே எடுப்பேன்.

இந்த ஆட்சியை மாற்றுவதற்காக உறுப்பினர்களை அந்தப் பக்கம் இருந்து இழுத்தெடுக்கும்போது கவனமாகவே எடுப்பேன்.

*கே: பிணை முறித் திருடர்களுக்கு தண்டனை வழங்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தால் நீங்கள் அதற்கு ஆதரவு வழங்குவீர்களா?*

ப: நிச்சயமாக வழங்குவோம். ஆனால், உண்மையில் எமது ஆதரவு இதற்குத் தேவையில்லை. பொலிஸிடம் சொன்னால் கைது செய்வார்கள். சட்டமா அதிபரிடம் சொன்னால் வழக்குத் தாக்கல் செய்வார்.இது ஒரு நாடகம். தேர்தலுக்காக மக்களை ஏமாற்றுகிறார்கள். தண்டனை வழங்கப்படமாட்டாது என்றே நான் நம்புகிறேன்.

*கே : சர்வதேச நாடுகள் உங்களை விரட்டுவதற்கு காரணம் என்ன?*

ப: அவர்களின் ஆட்டத்துக்கு நான் இடங்கொடுக்கவில்லை. யுத்தத்தில் தலையிடுவதற்கு முயற்சி செய்தனர். புலிகள் அரசுக்கு எதிரான யுத்தம் செய்தபோதிலும், அவர்கள் இந்த நாட்டு பிரஜைகள். அவர்கள் தவறு செய்தால் அவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கு வெளிநாட்டு உதவிகள் எனக்குத் தேவையில்லை.

பிரபாகரனை அழிப்பதற்கு அமெரிக்கா கப்பல்களையும் ஹெலிகொப்டர்களையும் இலங்கைக்கு அனுப்புவதற்கு தயாரானது. இந்தியத் தூதுவரின் ஊடாக அதை அறிந்துகொண்டு அமெரிக்க தூதுவரை அழைத்து அந்த வேலையை நிறுத்துமாறு கூறினேன். எனக்கு இவை தேவை என்றால் நான் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சீனா போன்ற நாடுகளிடம் பெற்றுக்கொள்வேன் என்று கூறினேன். இதுபோன்ற காரணங்களால்தான் மேற்குலகம் எனக்கு எதிராகச் சதி செய்தது.

*கே: இந்தத் தேர்தல் மகிந்தவை பிரதமராக்கும் தேர்தல் என்று உங்கள் தரப்பினர் கூறுகின்றனரே. இது உண்மையா?*

ப: அப்படி ஓரிருவர் கூறியிருப்பர். இது அதைவிடவும் வித்தியாசமான தேர்தல். இந்த நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் தேர்தல் இது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தல் முடிவுகளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.

"ஒற்றை ஆட்சி என்றதும் பௌத்த மதத்துக்கு ஆபத்து ஏற்படாது என்றும் நாம் தெற்கில் கூறும்போது அவர்கள் சந்தோஷமடைகிறார்கள். ஆனால், நீங்கள் இது ஒற்றை ஆட்சி என்று நினைத்து கவலைப்பட வேண்டாம். வருகின்ற புதிய அரசமைப்பு சமஷ்டிக்கு அப்பால் தமிழீழத்தை உருவாக்கும் அரசியலமைப்பு" என்று சுமந்திரன் வடக்கில் கூறுகின்றார். அரசியலமைப்பில் அரசு காட்டுவது ஒன்று உள்ளே இருப்பது ஒன்று என்பது சுமந்திரனின் பேச்சில் இருந்து தெரிகிறது.

*கே: கடந்த ஜனாதிபதித் தேர்தலில் உங்களுக்கு எதிராக நின்ற தமிழ்-முஸ்லிம் மக்கள் இனி உங்களுக்கு ஆதரவாக மாறுவார்களா?*

ப: அவர்கள் இப்போதைய நிலைமையை விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனால், முஸ்லிம்களின் அதிகமானவர்கள் புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளனர். அதிகமான முஸ்லிம்கள் என்னைச் சந்திக்க வருகின்றனர். கடந்த காலங்களில் என்னை அதிகம் வந்து சந்தித்தவர்கள் முஸ்லிம்கள்தான்.

ஒவ்வொரு ஞாயிறும் என்னை வந்து சந்திக்கும் முஸ்லிம்கள் மத்தியில் அதிகமான கிழக்கு முஸ்லிம்கள் இருக்கின்றனர். அவர்கள் கைக்குழந்தைகளுடன் என்னை வந்து சந்திக்கின்றனர். இதை வைத்து மாற்றம் ஒன்று ஏற்பட்டுக்கொண்டு செல்கின்றது என்று என்னால் சொல்ல முடியும்.

பேருவளை நகர சபையை நாமே வெற்றிகொள்வோம். தமிழர்களும் உண்மை நிலைமையை விளங்கிக்கொள்ள வேண்டும்.

*கே: மொட்டுச் சின்னத்தில் போட்டியிடும் மற்றும் அந்தக் கட்சிக்காக வேலை செய்யும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் உறுப்புரிமை பறிபோகும் என்ற அச்சம் உள்ளதே?*

ப: தேர்தலின் பின் அவ்வாறு நடக்கலாம். அதுபற்றி எமக்கு கவலை இல்லை.


*கே் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் உங்கள் தரப்பின் வேட்டபாளர் யார்?*

ப: மக்கள் யாரை விரும்புகிறார்களோ அவர்.

*கே: நீங்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் நீங்கள் ஏற்கனவே செய்த பிழையை மீண்டும் செய்யமாட்டீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?*

ப: ஒரு தடவை செய்த தவறை மீண்டும் செய்யும் ஆள் நானில்லை. விட்ட பிழைகளை திருத்திக்கொண்டே பயணிப்போம்.

**மொழியாக்கம்: எஸ்.சுரேஷ்**



## சித்திரை மாதச் சித்திரையில் பிறந்த புத்திரர்களா இவர்கள்?

இண்டைக்குக் கொஞ்சம் பஞ்சியியாக் கிடந்திது. காலமை பேப்பர் கடைக்குப் வெளியாலை போகாமல் வீட்டிலை படுத்திருந்தன். முதலி தன்ரை சகோதரியின்ரை பேத்தியின்ரை சாதகத்தை எழுதக்குடுத்தவன். எடுத்துக் கொண்டு போறவழியிலை பேப்பரையும் தந்திட்டுப் போகவெண்டு வந்தான்.

"பிள்ளை என்ன நட்சத்திரம்" எண்டு கேட்டன். "சித்திரை நட்சத்திரம் அண்ணை. நல்ல காலம் பெண் பிள்ளையாப் போச்சுது. ஆம்பிளைப் பிள்ளை எண்டால் பெரும்பாடாப் போயிருக்கும். அதுவும் சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரம் எண்டால் சொல்லத் தேவை இல்லை. அந்தக் குடும்பம் நடுத்தெருவிலைதான் எண்டு சாத்திரி சொன்னவர்" எண்டு சொன்னான். அப்ப நான் கேட்டன் "உதை நீ நம்பிறியோ, முதலி" எண்டு. "நம்பாமல் என்ன செய்யிறது. ஊருலகத்திலை உது நடந்திருக்கு. செல்லத்துரையின்ரை பெடி சித்திரை மாதத்திலை வந்த ஒரு சித்திரை நட்சத்திரத்திலை பிறந்து இண்டைக்கு எத்தினை வருசம்? இண்டைக்கும் செல்லத்துரையாலை தலை தூக்க முடியாமலெல்லே கிடக்கு? அதாலைதானே நம்ப வேண்டிக்குக் கிடக்கு.

உந்தச் சித்திரை நட்சத்திரம் எண்ட கதை வரேக்கை அந்தக் காலத்திலை நான் "சிரித்திரன்" பத்திரிகையிலை படிச்ச ஒரு விசியம் ஞாபகம் வருகிது. அந்தப் பத்திரிகையிலை "மகுடி" கேள்வி பதில் எண்ட ஒரு பக்கம் வாறது. அதிலை சனம் கேக்கிற கேள்விக்கு ஆசிரியர் சுந்தர் பதிலைச் சொல்லுறவர். அதிலை ஓராள் ஒரு கேள்வியைக் கேட்டிருந்தார். "மகுடியாரே! சித்திரை மாதச் சித்திரையில் புத்திரன் பிறந்தால் அக்குடி நாசம்" என்று சாத்திரம் சொல்வது உண்மையா? எண்டு கேட்ட கேள்விக்கு அவர் சொன்ன பதில் என்ன தெரியுமே? "வாசகரே! அப்போ எமது தமிழ் தலைவர்கள் எல்லாம் சித்திரைமாதச் சித்திரையிலா பிறந்தார்கள்?" எண்டு நகைச்சுவையா அண்டைய தமிழ் இனத்தின்ரை நிலமையைச் சொல்லியிருந்தார். அது இண்டைக்கும் பொருந்துதெல்லே?


அவரிட்டை இருந்து சாத்திரத்துக்கு அப்பிடி ஒரு விளக்கம். அவர் சொன்ன இன்னுமொரு கேள்வி பதிலும் என்ரை ஞாபகத்துக்கு வருகிது. இது தமிழற்றை குணத்தைப் பற்றினது. "கடலில், படகொன்றில் மூன்று தமிழர்கள் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். திடீரென அடிக்கும் புயலில் சிக்குண்டு அந்தப் படகு தீவு ஒன்றில் ஒதுங்குகிறது. அங்கு அந்தத் தமிழர்கள் என்ன செய்வார்கள், மகுடியாரே?" எண்டதுதான் அந்தக் கேள்வி. அதுக்கு ஆசிரியர் சொன்ன பதில் என்ன தெரியுமே? "அந்த மூன்று தமிழர்களும் ஒன்றாகச் சேர்ந்து முதலில் ஒரு சங்கம் அமைப்பார்கள். பின்பு தமக்குள்ளே சண்டையிட்டு மூன்று பேரும் மூன்று வெவ்வேறு சங்கங்களை அமைப்பார்கள்" இது எத்தினை உண்மை தெரியுமே. இஞ்சையும்,வெளிநாடுகளிலும் போய் உதைத்தானே எங்கடை ஆக்கள் செய்து கொண்டிருக்கினம். பரிசு கெட்டதுகள்.

இப்ப கொஞ்ச நாளுக்கு முன்னம் வீரசிங்கம் மண்டபத்திலை தமிழுக்கு விழா எடுத்த உலகத் தமிழ் பண்பாட்டுக் கழகத்துக்கும் சக்களத்தியா ஒரு சங்கமும் இருக்காம். அது இப்ப ஒரு வருசத்துக்கு முன்னம் வந்து வீட்டுக்காரரை வைச்சு கம்பஸிலை ஒரு விழா எடுத்துக் கண்டது நிண்டது எல்லாத்தையும் கௌரவிச்சுப் போட்டுப் போனது தெரியுந்தானே? அந்தச் சங்கமும் இன்னும் எத்தினை எத்தினையாப் பிரியுமோ தெரியாது?

உப்பிடி எத்தினை சங்கங்கள் கூடிப் பிரிஞ்சு. குறை குற்றம் சொல்லிக் கொண்டு இருக்கிதுகள். உது கடைசியா ஒட்டு மொத்தத் தமிழருக்கும் அவமானமெல்லே? உதை ஒரு சாத்திரி மாதிரிச் சிரித்திரன் ஆசிரியர் அப்பவே சொல்லிப் போட்டார். நேர்மையான பத்திரிகைக்காரரும், எழுத்தாளரும் ஒருவகையிலை ஞானியள் மாதிரித்தான். அவையின்ரை பேனை ஒருக்காலும் தவறாது. சரியாச் சாத்திரம் மாதிரித்தான் விசியத்தை எழுதும். முந்தின காலத்திலை பாட்டுக்காரர் கோவம் வந்தால் அறம்பாடுவினம். அப்பிடி அறம் பாடின இடமோ, ஆக்களோ பிறகு ஒருக்காலும் உய்யாததைக் கண்டிருக்கிறன். ஆனபடியால் சொல்லுறன் உந்த அரசியல்வாதியள் சிலபேர் பேப்பர்காரரை எதிர்க்கிறவை. தயவு செய்து நியாயமானவையளை எதிர்காதையுங்கோ. அவை எழுதினால் கட்டாயம் பலிக்கும் கவனம்!

**- வில்லங்கம் விநாசி**

# அரசாங்கத்துக்கு தோல்வி! சொல்கிறார் முதலமைச்சர்



யாழ்ப்பாணம், பெப். 05


வடக்கில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது வட மாகாண சபையுடன் இணைந்து செயற்படுவதில் அரசாங்கம் தோல்வி கண்டுவிட்டதாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

முதலமைச்சராக தாம் உள்ள நிலையில், திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னரே அழைக்கப்படுவதாகவும் முதலமைச்சர் கூறினார் என வாராந்த ஆங்கில ஊடகமொன்று தெரிவித்துள்ளது.


திட்டங்கள் குறித்து அரசாங்கம் முதலில் வட மாகாண சபையுடன் கட்டாயமாக கலந்துரையாட வேண்டும் என்றும், அவற்றை நடைமுறைப்படுத்தும்போது, வட மாகாண சபையுடன் இணைந்து செயற்படவேண்டும் எனறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு மட்டுமல்லாது, அனைத்து மாகாணங்களுக்கும் சமஷ்டி தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## இன்றைய கேலிச்சித்திரம்



## கட்சித் தலைவர்கள் இன்று கூடுகின்றனர்



கொழும்பு, பெப். 05

நாடாளுமன்றகட்சித்தலைவர்களுடனான விசேட கூட்டம் இன்று நடக்கவுள்ளது.

இன்று பகல் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இந்த கூட்டம் நடைபெறும் என நாடாளுமன்ற பிரதிச் செயலாளர் நீல் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி பிணை முறிப்பத்திரம் மற்றும் பாரிய, ஊழல்,மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் சம்பந்தமாக நடக்கும் விவாதம் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.

இந்த விவாதம் நாளை மறுதினம் நாடாளுமன்றிலும் இடம்பெறவுள்ளது. இந்நிலையில் இந்த விவாதத்தை அடுத்த தினங்களிலும் விவாதத்தை நடத்துவதா இல்லையா என்பது குறித்து இந்த கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்படும் எனத் தெரிய வருகின்றது.(ச)

## புதையல் தோண்டியோர் கைது

பலாங்கொட, பெப்.05,

பலங்கொடை சமனலவெவ பகுதியில் புதையல் அகழ்வில் ஈடுப்பட்ட நால்வர் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து புதையல் அகழ்விற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் சிலவும், பூஜைப் பொருட்கள் சிலவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

திவுல்வெவ, கனேமுல்லை, இம்புல்கொடை ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர். நேற்று அவர்கள் பலாங்கொடை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். (இ)

## மில்லியன், பில்லியன் அரசுக்கு தெரியாதாம்



கொழும்பு, பெப்.05

தாம் வாங்கிய கடனை விட இன்றைய இந்த அரசாங்கம் இரண்டு மடங்கு கடனை பெற்று நாட்டை அழித்துவருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குற்றம் சாட்டியுள்ளார்.

கெகிராவை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய மகிந்த, தற்போதைய அரசாங்கத்தினருக்கு உரிய முறையில் கணிப்புக்களை மேற்கொள்ள தெரியவில்லை. மில்லியனுக்கு பில்லியன் எனவும், பில்லியனுக்கு ட்ரில்லியன் எனவும் கணிப்புக்களை மேற்கொள்கிறார்கள்.

தற்போதைய அரசாங்கம் நாங்கள் வாங்கிய கடனை விட இரண்டு மடங்கிற்கும் அதிகமான கடனைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், அதன் மூலம் எந்த அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். (இ)

## வேட்பாளர் கைது



புதுக்குடியிருப்பு, பெப். 05

புதுக்குடியிருப்பில் தேர்தல் சுவரொட்டிகளுடன் வேட்பாளர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவிலேயே இவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசுவமடு பிரதேச வேட்பாளர் என்றும், ஐக்கிய தேசியக் கட்சி, ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகளின் துண்டுப் பிரசுரங்களையே அவர் ஒட்டமுயன்றார் என்றும் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட வேட்பாளரிடமிருந்து சுவரொட்டிகள் மீட்கப்பட்டுள்ளன என்றும், அவரை நீதிமன்றத்தில முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச)

## தொடர்ச்சிகள்

### கேப்பாபிலவில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் காணிகளை விடுவிக்கக் கேட்டு 339 ஆவது நாளாக நேற்றும் மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இலங்கையின் 70 ஆவது சுதந்திரதினமான நேற்று போராட்டம் நடக்கும் இடத்தில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள முருகன் ஆலயம் வரை போராட்ட பவனி ஒன்றை மக்கள் நடத்தினர்.

எதிர்ப்பு கோஷங்களை எழுப்பியும், கறுப்புக் கொடிகள், பதாதைகளை ஏந்தியும் பவனியாக சென்றவர்களை அங்கு வந்த பொலிஸார் தடுத்து நிறுத்தினர். போராட்டத்தை நடத்த முடியாது கலைந்து செல்லுமாறு அவர்கள் கூறினர். மக்கள் மறுக்கவே இரு தரப்பினரிடையேயும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதன்போது மக்கள் வைத்திருந்த பதாதைகளை பொலிஸார் பறித்து எறிந்தனர். இதையடுத்து மக்களின் போராட்டமும் எதிர்ப்பும் வலுத்தபோதும் பொலிஸார் தொடர்ந்து போராட்டத்தை நடத்த அனுமதிக்கவில்லை. மக்களும் வீதியில் அமர்ந்து போராட்டத்தை நடத்தியிருந்தனர். (ச)

### மகிந்தவின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உக்ரைன் போராளிகளுக்கு ஆயுதங்களை வழங்கியமை, ரஷ்ய தூதரகத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் இரு மர்ம மரணங்களுடன் இவருக்கும் தொடர்பிருப்பதாகக் கருதப்படுகின்றது.

உதயங்க வீரதுங்கவுக்கு வழங்கப்பட்ட இராஜதந்திர கடவுச்சீட்டை இவர் இன்னமும் பயன்படுத்தி வருவதாகவும் இவருக்கு எதிராக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இலங்கை விமானப்படைக்கு மிக் விமானம் கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பில் இடம்பெற்றதாக கூறப்படும் மோசடியிலும் இவர் சம்பந்தப்பட்டுள்ளார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. (ச)

### சுதந்திர தினத்துக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டாடும் சிங்கள மக்களுக்கு வாழ்த்துக்கள். இப்படிக்குத் தொடர்ந்தும் சுதந்திரத்திற்காகப் போராடும் தமிழர்கள்" என எழுதப்பட்ட பதாதையை போராட்டக் காரர்கள் தாங்கியிருந்தனர்.

மேலும், "தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கவும், காணாமல் ஆக்கவும், கடத்தவும், சிறை வைக்கவும் உருவானதே பயங்கரவாதத் தடைச் சட்டம்" என்றும் அவர்கள் கூறினர்.

இதேவேளை, கிளிநொச்சியிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கறுப்பு உடையணிந்தும் கறுப்புப் பட்டி அணிந்தும் போராட்டத்தைத் தொடர்ந்திருந்தனர். (ச)

### தெற்கில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசங்களிலும் திணைக்களங்கள், அலுவலகங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், வீடுகளில் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. சுதந்திர தினத்தை முன்னிட்டு பல கொண்டாட்ட நிகழ்வுகளும் களை கட்டியிருந்தன.

தமிழ் மக்கள் அதிகம் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுதந்திர தின நிகழ்வுகள் சோபை இழந்திருந்தன. வடக்கு மாகாணத்தில் அதிகளவில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. முல்லைத்தீவின் கேப்பாபிலவில் இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருக்கும் காணிகளை விடுவிக்கக் கேட்கும் மக்கள் போராட்டத்தை நடத்தினர். இதேபோன்று வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் தொடர் போராட்டங்களை நடத்தும் மக்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

எனினும், மாவட்ட செயலகங்களில் சுற்றுநிருபத்துக்கு அமைய கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. இந்நிகழ்வுக்கு அரச அதிகாரிகளும், பாடசாலை மாணவர்களும் கட்டாயத்தின் பேரில் அழைக்கப்பட்டிருந்தனர். இராணுவத்தினரே நிகழ்வுகளைப் பொறுப்பேற்று நடத்தியிருந்தனர்.

வர்த்தக நிலையங்களிலோ, வீடுகளிலோ தேசியக் கொடிகள் பறக்கவிடப்படவில்லை. எனினும் நகர மற்றும் முக்கிய பகுதிகளில் இராணுவத்தினர் தேசியக் கொடிகளை கட்டிச் சென்றிருந்தனர். (ச)

### பரணில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கும் முகமாக கறுப்பு உடை அணிந்து, உணவை ஒறுத்து, மௌனமாக இந்தப் போராட்டத்தை அவர் மேற்கொண்டார். 70 ஆவது சுதந்திர தினத்தைப் புறக்கணிக்கும் - எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இந்தப் போராட்டத்தை அவர் மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை, கேப்பாபிலவு மக்கள் காணிகளை விடுவிக்கக் கேட்டு, நேற்றுடன் 339 ஆவது நாளாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ)

### கைது... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்பச்சுவல் ட்ரஸரீஸ் நிறுவனமே தொடர்புபட்டிருந்தது. இதனாலேயே அவரும், அந்நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேனவும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை இந்த மோசடியுடன் பிரதான தொடர்புடைய மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் தற்போது நாட்டில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# எண்ணெய்க் கப்பல் கயானாவில் மாயம்

கயானா,பெப்.05

மேற்கு ஆபிரிக்க கடற்பகுதியில் 22 இந்திய மாலுமிகளுடன் எண்ணெய் ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று கடந்த மூன்று நாட்களாக மாயமாகியுள்ளது. குறித்த கப்பலைக் கடற்கொள்ளையர்கள் கடத்தியிருக்கலாம் என அச்சம் எழுந்துள்ளது.



மேற்கு ஆபிரிக்கப் பகுதியில் உள்ள கயானா வளைகுடாக் கடலில் ஆங்கிலோ ஈஸ்டர்ன் என்ற கம்பனிக்கு சொந்தமான கப்பலே இவ்வாறு 8.1 மில்லியன் டொலர் மதிப்பிலான பெற்றோலுடன் மாயமாகியுள்ளது.

3 நாட்கள் கடந்த பின்னரும் இதுவரை எந்தத் தகவலும் இல்லாத நிலையில், குறித்த கப்பல் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. மாயமாகிய கப்பலில் 22 இந்தியர்கள் பணியாற்றி வந்தனர் என்றும், அவர்களில் பலர் கேரளாவைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

இறுதியாகக் குறித்த கப்பலில் இருந்து கடந்த மாதம் 31-ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் தகவல் பரிமாறப்பட்டுள்ளது. மாயமான கப்பல் தொடர்பில் தேடுதல் வேட்டை தொடங்கியுள்ளதாகவும், கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள எஞ்சிய கப்பல்களுக்கும் தகவல் பகிரப்பட்டுள்ளது. (அ)

# முற்றுகிறது மோதல்

வோஷிங்டன், பெப்.05

அமெரிக்க புலனாய்வுத் துறையான எவ்.பி.ஐ அமைப்புக்கு எதிராக அந்த நாட்டு அரசு தரப்பில் குறிப்பாணை வெளியிடப்பட்டுள்ளதால், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும் புலனாய்வுத்துறைக்கும் இடையிலான மோதல் முற்றியுள்ளது.

கடந்த 2016 இல் நடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின்போது குடியரசுக் கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்பும், ஜனநாயகக் கட்சி சார்பில் ஹிலாரி கிளின்டனும் போட்டியிட்டனர். இதில் டொனால்ட் ட்ரம்பை வெற்றி பெறச் செய்ய ரஷ்ய உளவு நிறுவனங்கள் சமூக வலைதளங்களில் தவறான தகவல்களைப் பரப்பியதாகக் குற்றம்சாட்டப்பட்டது.

இதுகுறித்து அமெரிக்கப் புலனாய்வுத் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்ற பிறகும் இவ் வழக்கு விசாரணை தொடர்ந்து நடக்கிறது. ஆயினும்இந்த விசாரணையை நீர்த்துப்போகச் செய்ய அரசு தரப்பு தீவிர முயற்சி செய்வதாக ஜனநாயக கட்சியினர் குற்றம் சாட்டி வருகின்றனர். இந்த நிலையில் புலனாய்வுத் துறையின் விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் குறிப்பாணை ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது. இது புலனாய்வுத்துறை வட்டாரங்களில் பெரும் அதிருப்தியை உண்டாக்கியுள்ளது. (அ)

# முதலை எனக்கு குழந்தை



தாய்லாந்து, பெப்.05

தாய்லாந்தைச் சேர்ந்த முகமட் இவான் என்பவர் தன் செல்லப்பிராணியாக வீட்டிலேயே ஒரு முதலையை வளர்த்து வருவது அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுமார் 200 கிலோ எடை கொண்ட 21 வயதான இந்த முதலையுடன் இவான் விளையாடுகிறார். பல் துலக்கி விடுகிறார். குளிக்க வைக்கிறார்.

"1997 ஆம் ஆண்டு ஒரு மீனவரின் வலையில் சின்னஞ்சிறு குட்டியாக இந்த முதலை மாட்டிக்கொண்டது. அதைப் பார்த்தவுடன் எனக்குப் பிடித்துவிட்டது. பணம் கொடுத்து வாங்கி வந்துவிட்டேன். ஆனால் என் வீட்டில் ஒருவரும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்காக நான் முதலையைக் கைவிடவில்லை.

கோஜெக் என்று பெயரிட்டு அன்பாக வளர்த்து வந்தேன்.

வீட்டில் ஒருபெரிய தண்ணீர்த் தொட்டியை முதலைக்காகக் கட்டினேன். எனக்கு முதலைகளைப் பற்றி பெரிதாக விஷயம் ஒன்றும் தெரியாது. நாளடைவில் நேரடியாகவே முதலையின் இயல்பை அறிந்துகொண்டேன்.

வீட்டிலுள்ளவர்களுக்கும் முதலையைப் பிடிக்க ஆரம்பித்துவிட்டது. இப்போது 8 அடி நீள பிரமாண்டமான முதலையாக மாறி விட்டது. என் குழந்தைகள் முதலையின் அருகிலேயே விளையாடுகின்றனர். இதுவரை யாருக்கும் எந்தத் தீங்கும் அது செய்ததில்லை. தினமும் 1.5 கிலோ முதல் 5 கிலோ மீன் வரை சாப்பிடுகிறது. இதைத் தவிர பெரிய செலவு ஒன்றும் இல்லை. வாரம் ஒரு முறை முதலையின் தோலைத் தேய்த்து, நன்றாகக் குளிக்க வைப்பேன். பல் துலக்கிவிடுவேன். உள்ளூர் மற்றும் வெளிநாட்டினர் கூட முதலையைப் பார்க்க வருகிறார்கள்.

வெளிநாட்டுக்காரர் ஒருவர் 47 லட்சம் ரூபாவுக்கு முதலையை வாங்கிக் கொள்வதாகச் சொன்னார். இது என் குழந்தை என்று மறுத்துவிட்டேன்" என்கிறார் முகமட் இவான். (அ)

# நடிகர் சங்கத்தில் மீண்டும் போட்டி

சென்னை, பெப்.05

இந்த வருடமும் விஷால் தலைமையிலான அணி, நடிகர் சங்கத் தேர்தலில் போட்டியிடும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த முறை நடந்த நடிகர் சங்கத் தேர்தல் பற்றி யாரும் மறந்திருக்க வாய்ப்பில்லை. விஷால் மற்றும் சரத்குமார் அணியினர் மோதிக்கொண்டது, ஒருவரை ஒருவர் மாறி மாறி மீடியாவில் திட்டியது என பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் தான் அது நடந்தது.




விஷால்-நாசர் அணி வெற்றிபெற்ற பிறகு நடிகர் சங்கக் கட்டடம் கட்டும் பணிகள் தற்போது நடந்து வருகின்றன.

இந்நிலையில் இந்த வருடம் மே மாதம் நடக்கவுள்ள அடுத்த தேர்தலில் யார் ஜெயிப்பார்கள் என்று பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

விஷால் அணி மீண்டும் போட்டியிடும் என நடிகர் நாசர் தற்போது அறிவித்துள்ளார். சரத்குமார்-ராதாரவி இருவரும் சங்கத்தில் இருந்து நீக்கப்பட்டாலும் நீதிமன்ற அனுமதி பெற்று இருவரும் தேர்தலில் போட்டியிட அதிக வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதனால் இந்த வருட நடிகர் சங்கத் தேர்தலும் அனல் பறக்கும் வகையில் தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.



# சந்திரகிரகணத்தில் பறக்கும் தட்டுகள்

லொஸ் ஏஞ்சல்ஸ், பெப்.05

ஜனவரி 31 ஆம் திகதி நிகழ்ந்த சந்திரகிரகணத்தின் போது பறக்கும் தட்டுகள் கடப்பது போன்ற காட்சிகள் பதிவாகியுள்ளதால், அது வேற்றுக்கிரக வாசிகளா என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது.

150 ஆண்டுகளுக்கு பிறகு அபூர்வ சந்திர கிரணம் கடந்த 31 ஆம் திகதி நிகழ்ந்தது.

நீல நிலவு என அழைக்கப்பட்ட இந்தச் சந்திரகிரணம், பூமிக்கு அருகில் நிலவு சஞ்சரிக்கும் சமயத்தில் நிகழ்ந்ததால் பலரும் இதனைப் பெரும் ஆர்வத்துடன் பார்வையிட்டனர். அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்சில் உள்ள வான் ஆய்வு மையத்தில், அபூர்வ சந்திர கிரகணம் நிகழ்ந்த போது வீடியோப் பதிவு செய்யப்பட்டது.

அந்த வீடியோப் பதிவில் நிலவுக்கு அருகே பிரகாசமான ஒரு பொருள் அதிவேகமாக கடந்து செல்வதைப் போன்ற காட்சிகள் இருந்துள்ளன.அந்தக் காட்சிகள் இப்போது யூடியூப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

மனிதனால் தயாரிக்கப்பட்ட விண் பொருள் இவ்வளவு வேகத்தில் செல்ல வாய்ப்பே இல்லை என்று அறிவியல்

ஆராய்ச்சியாளர்களும், நிபுணர்களும் கருதுகின்றனர். எனவே அவை வேற்றுக்கிரக வாசிகளின் பறக்கும் தட்டுகள் தானா என்ற குழப்பம் ஆராய்ச்சியாளர்களிடையே எழுந்துள்ளது. (அ)

# முன்னாள் அமைச்சர் அ.தி.மு.க வில் நீக்கம்

சென்னை, பெப்.05

அ.தி.மு.க.வில் இருந்து முன்னாள் அமைச்சர் வளர்மதி ஜெபராஜ் உள்ளிட்டோர் நீக்கப்பட்டு உள்ளனர்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் இரு அணிகளாக செயற்பட்ட அ.தி.மு.க. மீண்டும் இணைந்தது. இதன் பின்னர் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட டி.டி.வி. தினகரன் கடந்த ஆர்.கே. நகர் இடைத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டு எம்.எல்.ஏ. ஆனார். கட்சியில் 'ஸ்லீப்பர் செல்கள்' உள்ளனர் என்றும் அரசு கவிழும் என்றும் தொடர்ந்து அ.தி.மு.க.



ஆட்சிக்கு எதிராக அவர் பேசினார். எனவே தினகரனுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருபவர்களைக் கட்சியில் இருந்து நீக்கும் முடிவை அ.தி.மு.க. எடுத்து வருகிறது.

இந்த நிலையில், அந்தக்கட்சியில் இருந்து முன்னாள் அமைச்சர் வளர்மதி ஜெபராஜ் உள்ளிட்டோர் நேற்றுமுதல் நீக்கப்பட்டு உள்ளனர்.

அத்துடன் மதுரையைச் சேர்ந்த டி.டி.வி. தினகரன் ஆதரவாளர்கள் 80 பேர் நீக்கப்பட்டு உள்ளனர். இதேபோன்று கட்சியின் கொள்கைக்கு எதிராக செயற்பட்டவர்கள் என விருதுநகரில் 25 பேர் நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர்.

கட்சியின் கொள்கை, கோட்பாடுகளுக்கு முரணான வகையில் செயற்பட்டனர் என அவர்களை கட்சியில் இருந்து நீக்கி முதல் அமைச்சர் பழனிசாமி மற்றும் துணை முதல் அமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# சிட்டகொங் டெஸ்ட் சமன்



சிட்டகொங், ஜன. 05

சிட்டகொங்கில் நடைபெற்று வந்த இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி வெற்றி-தோல்வியின்றி சமநிலையில் முடிந்தது.

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் சிட்டகொங்கில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், முதல் இன்னிங்ஸில் மொமினுல் ஹக்யூ (176) சதத்தால் 513 ஓட்டங்களைக் குவித்தது. இலங்கை அணி சார்பில் லக்மல், ஹேரத் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய இலங்கை அணி, குசால் மெண்டிஸ் (196), தனஞ்சய டி சில்வா (173), ரோசன் சில்வா (109) ஆகியோரின் சதங்களால் பங்களாதேஷுக்குப் பதிலடி கொடுத்தது.

இலங்கை முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 713 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. தைஜுல் இஸ்லாம் 4 விக்கெட்டுகளையும், மெஹிதி ஹாசன் மிராஸ் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பின்னர் 200 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கியது பங்களாதேஷ்.

தமிம் இக்பால் (41), இம்ருல் கெய்ஸ் (19), முஷ்பிகுர் ரஹிம் (2) ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பங்களாதேஷ் நேற்றுமுன்தினம் 4ஆவது நாள் ஆட்ட முடிவில் 81 ஓட்டங்களைச் சேர்ப்பதற்குள் 3 விக்கெட்டுக்களை இழந்து நெருக்கடிக்குள் உள்ளாகியிருந்தது. மொமினுல் ஹக்யூ 18 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் களத்தில் இருந்தார்.

நேற்று கடைசி நாள் ஆட்டம் தொடங்கியது. மொமினுல் ஹக்யூடன் விக்கெட் காப்பாள் லித்தோன் தாஸ் ஜோடி சேர்த்தார். இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்கவே பங்களாதேஷுக்கு 119 ஓட்டங்கள் தேவைப்பட்டது. இருவரும் பொறுப்பை உணர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஐந்தாவது நாள் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருந்த போதிலும், அதனை எதிர்கொண்டு ஓட்டங்கள் சேர்த்தனர்.

சிறப்பாக விளையாடிய மொமினுல் ஹக்யூ 105 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் விளையாடிய லித்தோன் தாஸ் 94 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சதம் அடிக்கும் வாய்ப்பு இழந்தார்.

இறுதியில் பங்களாதேஷ் அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 307 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது இரு அணித்தலைவர்களும் போட்டியை முடித்துக் கொள்ள முடிவு செய்தனர். இதனால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிந்தது.

இந்த டெஸ்டில் 1533 ஓட்டங்கள் அடிக்கப்பட்டுள்ளன. ஆனால் 24 விக்கெட்டுக்கள் மாத்திரமே வீழ்ந்துள்ளன. இரு அணிகளுக்கு இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் எதிர்வரும் 8ஆம் திகதி டாக்காவில் நடைபெறவுள்ளது. (ஐ)

# யுனைடெட் வெற்றி சிட்டிக்கு நெருக்கடி

பிரிமீயர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் மான்செஸ்டர் யுனைடெட் வெற்றி பெற்ற நிலையில், மான்செஸ்டர் சிட்டியின் ஆட்டம் சமநிலையில் முடிந்தமையால் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது சிட்டி.

பிரிமீயர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் மான்செஸ்டர் சிட்டி பர்ன்லே அணியை எதிர்கொண்டது.

முதல் பாதியாட்டம் முடியும்போது 1-0 என்ற கோல் கணக்கில் மான்செஸ்டர் சிட்டி முன்னிலை வகித்தது.

2ஆவது பாதியாட்டத்தில் பர்ன்லே அணி கோல் ஒன்றைப் போட்டது.

இதன்பின்னர் கோல் எதுவும் அடிக்கப்படாமையால், ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

இதேவேளை நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் மான்செஸ்டர் யுனைடெட் தனது சொந்த மைதானத்தில் ஹட்டர்ஸ்பீல்ட் டவுன் அணியை எதிர்கொண்டது. இந்த ஆட்டத்தில் மான்செஸ்டர் யுனைடெட் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் புள்ளிப் பட்டியலில், மான்செஸ்டர் யுனைடெட் 26 போட்டிகள் முடிவில் 56 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தைப் பெற்றது. மான்செஸ்டர் சிட்டி 69 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது.

தற்போது இரு அணிகளுக்கும் இடையிலான இடைவெளி 13 புள்ளிகள் மாத்திரமே. இன்னும் 13 போட்டிகள் உள்ளன. ஒருவேளை மான்செஸ்டர் சிட்டி சில போட்டிகளில் மோசமான விளையாடினால், நெருக்கடிக்குள்ளாகும். (ஐ)




# இந்தியா அதிரடி வெற்றி!



செஞ்சூரியன், ஜன. 05

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் இந்திய அணி அதிரடி வெற்றி பெற்றது.

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 6 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. கடந்த முதலாம் திகதி டர்பனில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் இந்தியா 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்நிலையில் 2ஆவது ஆட்டம் செஞ்சூரியனில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, சாஹல் மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோரின் பந்து வீச்சைச் சமாளிக்க முடியாமல் 32.2 ஓவர்களில் 118 ஓட்டங்களுள் சுருண்டது.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில், சாஹல் 5 விக்கெட்டுகளையும், குல்தீப் யாதவ் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

பின்னர் 119 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இந்திய அணிக்கு, ரோகித் சர்மா, தவான் ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினார்கள். இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை 26ஆக இருந்தபோது ரோகித் சர்மா 15 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து தவானுடன் விராட் கோஹ்லி ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இந்தியா இலக்கை எட்டிக்கொண்டிருந்த அதேவேளையில் உணவு இடைவேளைக்கான நேரமும் நெருங்கியது. இந்தியா 15 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 93 ஓட்டங்கள் சேர்த்திருந்தது. மேலும் வெற்றிக்கு 26 ஓட்டங்கள் மாத்திரமே தேவைப்பட்டன. நடுவர்கள் கூடுதலாக 15 நிமிடம் வழங்கினார்கள். அந்த நேரத்துக்குள் இந்தியா 4 ஓவர்கள் விளையாடி 24 ஓட்டங்களையே சேர்த்திருந்தது.

மேலும் 2 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் நடுவர்கள் மதிய உணவு இடைவேளை என்று அறிவித்தனர். இதனைச் சற்றும் எதிர்பார்க்காத விராட் கோஹலி அதிர்ச்சியானார். தென்னாபிரிக்கா வீரர்களும் இந்த முடிவை விரும்பவில்லை.

கிரிக்கெட் விதிமுறை என்பதால் உணவுக்காக இடைவெளி விடப்பட்டது. அதன்பின் களமிறங்கிய இந்தியா 20.3 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 119 ஓட்டங்கள் சேர்த்து 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. தவான் 51 ஓட்டங்களுடனும், விராட் கோஹ்லி 46 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா 6 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் 2-0 என முன்னிலை பெற்றுள்ளது. இந்த ஆட்டத்தில் 5 விக்கெட்டுகள் வீழ்த்திய சாஹல் ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

இரு அணிகளும் மோதும் 3ஆவது போட்டி கேப்டவுணில் எதிர்வரும் 7ஆம் திகதி நடக்கவுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 05.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.